மஞ்சள் காமாலை நோய்.

* **7800 திரு. குமரி அனந்தன் :**

திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் மஞ்சள் காமாலை நோயால் எத்தனை பேர் சென்ற ஆண்டில் தாக்கப்பட்டார்கள் ?

(ஆ) மஞ்சள் காமாலை நோய்த்தடுப்பு மருந்து (Hepatitis Vaccine) எத்தனை அரசு மருத்துவமனைகளில் உள்ளது ?

(இ) எதிர் காலத்தில் இதை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் 1989 ஆம் ஆண்டு மஞ்சள் காமாலை நோயால் 4,645 பாதிப்புகளும், 38 இறப்புகளும் ஏற்பட்டன.

(ஆ) எந்த மருத்துவமனையிலும் மஞ்சள் காமாலை நோய்த் தடுப்பு மருந்து (Hepatitis Vaccine) இல்லை.

(இ) இந்தியாவில், டெல்லி, சண்டிகார், அகமதாபாத் மற்றும் ஐதராபாத் போன்ற இடங்களில் அமெரிக்க நாட்டிலிருந்து ''மெர்க் ஷார்ப்டோம்'' மூலமாக தருவிக்கப்பட்ட மருந்தைக் கொண்டு மஞ்சள் காமாலையைக் குணமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அம்முயற்சிகளின் முடிவுகள் தெரிந்த பின் இதனை செயல்படுத்த அரசு முயற்சிக்கும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் காமாலை நோயை உண்டாக்கும் ஆஸ்திரேலியா இன்டஜின் பி வைரஸ் என்று சொல்லுகின்ற அந்த வைரஸ் சாதாரணமாக மக்களுடைய ரத்தத்தில், நூற்றுக்கு 20 பேர்களுடைய ரத்தத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதனை, வேலூர் சி.எம்.சி., ஸ்டான்லி மருத்துவமனை, இங்கு இருக்கின்ற சிறு நீரக ஆராய்ச்சி மையங்கள் தெரிவித்துள்ளன. இதற்கு மேற்கொண்டு, டயாக்னோசிஸ் பிரிவிலே வேலை செய்கின்றவர்களுக்கு இந்த நோய் தொற்றிக் கொள்வதாகவும் சொல்கிறார்கள். இப்படித் தொற்றுவதால் அவர்கள் யாருக்காக

1990 ஏப்ரல் 26]

பணி செய்கிறார்களோ அவர்களுக்கும் இந்த நோய் தொற்றிக் கொள்வதாகச் சொல்கிறார்கள். இது ஆய்வின்படி முடிவானது. ஆகவே, இதற்கான வேக்சின் என்பது கட்டாயமாக ஒவ்வொரு மருத்துவமனையிலும் இருந்தாக வேண்டும். ஆனால் தமிழ் நாட்டில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்,—ஜி.எச்.சில் சில நேரங் களில்,—சென்னையிலேயே கிடைப்பதாகச் சொல்கிறார்கள். ஆக, மொத்தத்தில் தமிழ் நாட்டில் இது கிடைக்கவில்லை. ஆனால், இந்த வைரஸ் எல்லோருக்கும் வரும் என்ற நிலை இருக்கிற காரணத்தால் இந்த வேக்சினை எப்படியாவது பெற்று எல்லா மருத்துவமனைகளிலும் வைப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா, ஏற்பாடு செய்யுமா என அறிய விரும் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய்க்கான தடுப்பு மருந்து கூட இப்போது கண்டுபிடிக்கப்பட்டு, மேலை நாடுகளில் போடப்படுகிறது. ஆனால் 3 மாதத்தில் இருந்து 24 மாதத்திற்குள்ளாக அந்தத் தடுப்பு மருந்தை உப யோகப்படுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. முதல் டோஸ் 3 நாட்களுக்குள்ளாகவும், மூன்றாவது டோஸ் 6 மாதத்திற் குள்ளாகவும் போடப்பட வேண்டும். பல்வேறு நோயாளி களை பரீட்சித்துப் பார்த்ததில் திரும்ப இந்த நோய் வராத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் சொல்வதை கவனித்து, இதற்கு தடுப்பு ஊசி போடு வதற்கான முயற்சிகளைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அரசு மருத்துவமனைக்கு வந்தால் ஆரம்பத்திலேயே அந்த நோயைப் பற்றி டாக்டர்கள் உடனடியாக கண்டு பிடிக்காமல், காய்ச்சல் அல்லது வேறு நோய் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லி வேறு மருந்து கொடுத்துவிடுகிற காரணத்தால் நோய் முற்றிப் போய்விடுகிற நிலை இருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் அரசுக்கு புகார் அனுப்பியிருக்கிறார்களா? அதுமட்டுமல்லாமல், மஞ்சள்காமாலை நோய் என்று சொன்னால், சாதாரணமாக கிராமங்களில் இருக்கக் கூடிய மக்கள் கூட கீழா நெல்லியை ஆட்டுப் பாலில் அரைத்துக் கொடுத்து மஞ்சள் காமாலை நோயை உடனடியாகத் தீர்க்கிற நிலை இருப்பதால், அம்மாதிரி முறையை தமிழகத்தில் கையாண்டு நோயைத் தீர்ப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத் தில் மஞ்சள் கரிசலாங்கண்ணியை அலோபதி மருத்துவ முறை

யோடு கலந்து அந்த மருந்தைக் கொண்டு வருகின்ற ஆய்வுகள் நடைபெற்று மருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும், நோய் வந்த 30 நாளிலிருந்து 90 நாள் வரை இந்த நோய் வந்திருக்கிறதா என்று தெரிவதில்லை. ஆகவே தான், நோயாளிகள் மருத்துவமனைக்கு உடனடியாகச் செல்லாமல் பெரும்பாலும் நோய் முற்றிய நிலையில் தான் மருத்துவமனைக்குச் செல்கிறார்கள். ஆரம்ப நிலையிலேயே சிம்டம்ஸ், வெளிப்பாடுகள் தெரியாத காரணத்தால் இதைக் கண்டு பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற தடுப்பு முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இதை முழுமையாக அழிக்கலாமா என்ற கருத்தையும் மனதில் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி

* 1372 திரு. கே. ஆர். சுந்தரம் :
மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை இன்னும் சரிவர கூட்டுறவுச் சங்கங்களும் தனியார்களும் அமுல்படுத்தாமல் இருப்பதாக அரசுக்கு முறையீடுகள் ஏதேனும் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அவ்வாறு வரப்பெற்ற முறையீடு தொழிலாளர் ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பேரில் நிர்ணயிக்கப்பட்டுள்ள அடிப்படை குறைந்தபட்ச ஊதியம், அகவிலைப்படி இரண்டும் சேர்த்து கணக்கிட்டு நெசவாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என நிர்வாகத்தினருக்கு அவரது சார்நிலை அலுவலர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

10-20 மணி

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு அரசு விதித்த குறைந்தபட்சக் கூலியை, கூட்டுறவுத் துறையிலே கூட இதுவரை முழுமையாக அமுல்படுத்தாத காரணத்தால் தமிழ்நாட்டிலே